பக்கங்கள்:-12

காலை முரசு

## கனடா பறந்தார் சிறீதரன் எம்.பி.



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் 06

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | மார்கழி 01 | திங்கட்கிழமை | 16.12.2024 | அதிர்வு 136





# ஜெய்சங்கர், நிர்மலா, தோவால் புதுடில்லியில் அநுரவுடன் பேச்சு

## முக்கிய பல விடயங்கள் குறித்து கலந்துரையாடல்



இந்தியாவுக்கான மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர், இந்திய நிதி மற்றும் நிறுவன அலுவல்கள் அமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் இந்திய பாதுகாப்பு ஆலோசகர் ஸ்ரீஅஜித் தோவால் ஆகியோர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பு புதுடில்லியில் அநுரகுமார தங்கியிருக்கும் ஹோட்டலில் நேற்று இரவு நடைபெற்றது. 05

# வடமராட்சியில் எலிக்காய்ச்சலால் 23 வயது இளைஞர் பரிதாப மரணம்


(எஸ்.ரகுதீஸ்)

வடக்கு மாகாணத்தில் எலிக்காய்ச்சல் நோயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 8 ஆக உயர்வடைந்துள்ளது.

எலிக்காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு உயிரிழந்தார்.

யாழ். வடமராட்சி – கரவெட்டிப் பகுதியைச் சேர்ந்த 23 வயது இளைஞரே இவ்வாறு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 5 நாட்கள் 05






இலங்கையின் மேனிலை நீதிமன்றங்களான உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள நீதியரசர்கள் வெற்றிடங்களை விரைந்து நிறைவு செய்வதற்கான வாய்ப்புக் கிட்டி இருக்கின்றது.

இதன்படி, உயர் நீதிமன்றத்தின் நான்கு நீதியரசர்கள் வெற்றிடங்களும் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இரண்டு நீதியரசர்கள் வெற்றிடங்களும் நிரப்பப்பட இருக்கின்றன.

உயர் நீதிமன்றத்திற்கு புதிய நீதியரசர்களாக மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் நியமிக்கப்பட்டால் அதனால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஏற்படக்கூடிய வெற்றிடங்களுக்கும் புதியவர்கள் நியமிக்கப்படக்கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இப்போது நீதியரசர்கள் சோபித ராஜகருண, மேனக விஜயசுந்தர, மொகம்மது லாபீர், சம்பத் பி.அபேக்கோன் ஆகியோர் சிரேஷ்ட நீதியரசர்களாக இருக்கின்றனர். அவர்கள் 05



# சிவனொளிபாத மலை பருவகாலத்தை முன்னிட்டு விசேட பஸ் சேவைகள்

சிவனொளிபாத மலை பருவகாலம் நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பமாகியுள்ள நிலையில், யாத்திரிகர்களின் வசதிக்காக மேலதிகமாக பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

புறக்கோட்டை மத்திய பஸ் நிலையத்திலிருந்து ஹட்டன் வரை வழமையாக இடம்பெறும் பஸ் சேவைகளுக்கு மேலதிகமாக வார இறுதி நாள்களில் நல்லதண்ணிய வரை மேலதிக பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் ஹட்டன் ரயில் நிலையத்திற்கு அருகிலிருந்து நல்லதண்ணி வரையிலும், விசேட பஸ் சேவைகள் இடம்பெறுகின்றன என இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது

# வெள்ளவத்தையில் அதிரடி நடவடிக்கை! போதைப்பொருள்களுடன் மூவர் கைது!!

## பெருந்தொகைப் பணமும் மீட்பு




கொழும்பு, வெள்ளவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொலிங்வூட் மாவத்தை பகுதியில் கொக்கெய்ன் மற்றும் குஷ் போதைப் பொருட்களுடன் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வலான ஊழல் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது தெஹிவளை பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சந்தேகநபரிடமிருந்து 36 கிராம் கொக்கெய்ன், 203 கிராம் குஷ் போதைப்பொருட்கள், போதைப்பொருள் கடத்தலின் மூலம் சம்பாதித்ததாகச் சந்தேகிக்கப்படும் பெருந்தொகைப் பணம், 5 கையடக்கத் தொலைபேசிகள், பணம் எண்ணும் இயந்திரம், 2 வங்கி அட்டைகள் மற்றும் இலத்திரனியல் தராசு என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பின்னர், கொலிங்வூட் மாவத்தை பகுதியில் 3 கிராம் 600 மில்லிகிராம் குஷ் போதைப்பொருளுடன் மேலும் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் மட்டக்குளி மற்றும் கொழும்பு 14 பிரதேசங்களைச் சேர்ந்த 24, 25 வயதுடையவர்கள் ஆவர்.

கைதான மூவரும் வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் வெள்ளவத்தை பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.



# ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு இந்தியாவில் ஆரவாரமான வரவேற்பு

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க நேற்று பிற்பகல் 5.30 மணியளவில் புதுடில்லி இந்திராகாந்தி விமான நிலையத்தை சென்றடைந்தார்.

இந்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சர் கலாநிதி எஸ்.முருகன், இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, இந்து சமுத்திர வலயத்தின் மேலதிகச் செயலாளர் புனித் அகர்வால், இந்திய உபசரணைப் பிரதானி அன்/மன் கவூர் உள்ளிட்ட இராஜதந்திரிகள் ஜனாதிபதிக்கு விமான நிலையத்தில் சிறப்பு வரவேற்பளித்தனர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் விஜயம் தொடர்பில் இந்திய ஊடகங்கள் சிறப்பாக பிரசாரம் செய்திருந்ததுடன், புதுடில்லி நகரின் பிரதான சுற்றுவட்டாரத்தில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் நரேந்திர மோடியின் புகைப்படங்கள் அடங்கிய பதாகைகளும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன என ஜனாதிபதி ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த சுற்றுப்பயணத்தில் வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ உள்ளிட்டோரும் கலந்துகொண்டுள்ளனர்.





# கட்டுப்பாட்டு விலையை மீறி அரிசி விற்பனை: வர்த்தகர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

அரிசியை கட்டுப்பாட்டு விலையை மீறி விற்பனை செய்யும் வர்த்தகர்களைத் தேடி, தொடர்ந்தும் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதன்படி, இதுவரையில் 307 சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் அசேல பண்டார தெரிவித்துள்ளார்.



அதன்படி தவறிழைத்துள்ள வர்த்தகர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை இன்று முதல் ஆரம்பிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.





# இன்னொரு மொழியைக் கற்பதால் நாம் குறைந்துவிடப்போவதில்லை!

## சிங்கள கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் உரை

"இன்னொரு மொழியைக் கற்பதால் நாம் குறைந்துவிடப்போவதில்லை. மாறாக நாம் வளர்வோம். எமது திறனை – ஆற்றலை வளர்த்துக்கொள்ள இன்னொரு மொழியைக் கற்பது அவசியமானது."

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வலியுறுத்தினார்.

சூரிய நிறுவகத்தின் ஏற்பாட்டில் இரண்டாம் மொழி சிங்கள கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சுதுமலை குபேரமஹாலில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் சூரிய நிறுவகத்தின் ஸ்தாபகரும் முன்னாள் சபாநாயகருமான கரு ஜயசூரியவும் கலந்துகொண்டார். அத்துடன் சுவிஸர்லாந்து தூதரகத்தின் பிரதித் தூதுவர் ஒலிவர் கௌரவ விருந்தினராகப் பங்கேற்றிருந்தார்.

மாணவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கிய பின்னர் பிரதம விருந்தினரான வடக்கு மாகாண ஆளுநர் உரையாற்றுகையில்,

"கிளிநொச்சி மாவட்ட செயராக நான் பணியாற்றிய காலத்தில் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சராக இருந்தவர் கரு ஜயசூரிய. அவர் சிறப்பான தலைமைத்துவத்தை வழங்கிய ஒருவர்.

கரு ஜயசூரியவைப் போன்று என்னால் நினைவுகூரப்படும் மற்றொருவராக மறைந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர இருக்கின்றார். யாழ். மாவட்ட செயலராக நான் பணியாற்றியபோது நிதி அமைச்சராக இருந்த அவர் பல்வேறு வகைகளிலும் உதவினார்.

இன ஐக்கியத்துக்காகவும், தேசிய ஒருமைப்பாட்டுக்காகவும் சிங்கள மக்கள் தமிழ் மொழியையும், தமிழ் மக்கள் சிங்கள மொழியையும் கற்கும் வகையில் இலவசமாக வகுப்புக்களை நடத்தி வரும் சூரிய நிறுவகத்தையும், அதன் நிறுவுநர் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவையும் பாராட்டுகின்றேன்.

சிங்கள மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பது இந்த நாட்டில் எங்கும் சென்று சேவையாற்றக் கூடிய வாய்ப்பை உருவாக்கும். கூடுதலான மொழியறிவு எங்களை மேம்படுத்த உதவும். இதன் ஊடாக ஆய்வுக்கான திறன் உள்ளிட்ட பல்வேறு ஆளுமைகளை வளர்க்க அது உதவும்." – என்றார்.

இந்த நிகழ்வில் மாணவர்களால் பல்வேறு கலை நிகழ்வுகள் சிங்கள மொழியிலும் நடத்தப்பட்டன.









## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
உயர்நீதிமன்றத்துக்கு நீதியரசர்களாகப் பதவி உயர்த்தப்படக் கூடும்.

ஆயினும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இருந்து மட்டுமல்லாமல், சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணிகள் வரிசையிலிருந்தும் கூட மேனிலை நீதிமன்றங்களுக்கு நேரடியாக நீதியரசர்கள் நியமிக்கப்படக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன எனச் சுட்டிக்காட்டப்படுகிறது

இதே சமயம் தற்போது நீதி அமைச்சின் செயலாளராக இருக்கும் அபிஷா ஜினசேன முன்னர் சட்டமா அதிபர் திணைக்களத்தில் சொலிஸிட்டர் ஜெனரலாகப் பதவி வகித்த போது, அவரை உயர்நீதிமன்ற நீதியரசர் பதவிக்கு அப்போதைய சட்டமா அதிபர் பரிந்துரை செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசராக இருக்கும் பந்துல கருணாரத்னவை உயர்நீதிமன்ற நீதியரசர் பதவிக்கு முன்னர் ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்கிரமசிங்க பரிந்துரைத்த போது, அதனை அப்போதைய அரசமைப்பு கவுன்ஸில் நிராகரித்திருந்தது. அந்த முடிவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு ஏற்ற உயர் நீதிமன்றம், பிரதம நீதியரசர் பதவி தவிர்ந்த ஏனைய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் பதவிக்குப் புதியவர்கள் நியமிக்கப்படுவதற்கு எதிராக இடைக்கால தடை விதித்திருந்தது. இப்போது அந்த அடிப்படை உரிமை மீறல் மனு விசாரித்து முடிக்கப்பட்டு, அது நிராகரிக்கப்பட்ட நிலையில், அந்த இடைக்காலத் தடைஉத்தரவும் முடிவுக்கு வந்திருக்கின்றது. அதனால் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் வெற்றிடங்களை நிரப்பக்கூடிய வாய்ப்புக் கிட்டியுள்ளது.

அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை அரசும் அரசமைப்பு கவுன்ஸிலும் இனி விரைந்து முன்னெடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல்நீதிமன்றத்தில் சிரேஷ்ட நிலைமையில் இருக்கின்ற நீதிபதிகள் சரத் திஸநாயக்க மற்றும் பிரதீப் ஹெட்டியாராய்ச்சி ஆகியோர் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களாக நியமிக்கப்பட வாய்ப்பு உண்டு.

அதேசமயம் சிரேஷ்ட பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் லக்மலி கருணநாயக்கரின் பெயரை மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் பதவிக்கு சட்டமா அதிபர் பரிந்துரைத்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

உயர் நீதிமன்றத்தின் நீதியரசர்களாக இருந்த புவனேக அலுவிகார (கடந்த வருடம் டிசம்பர்), பிரியந்த ஜயவர்தன (மார்ச்), விஜித் மழல்கொட (ஓகஸ்ட்) பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய (டிசம்பர்) ஆகியோரின் ஓய்வுடன் உயர் நீதிமன்றத்தில் நான்கு நீதியரசர்கள் பதவிகளுக்கு வெற்றிடங்கள் தொடர்ந்து நீடிப்பது குறிப்பிடத்தக்கது.

அரசமைப்புக் கவுன்ஸிலுடன் தமக்கிருந்த முரண்பாடுகள் காரணமாக இத்தகைய நீதியரசர்கள் வெற்றிடங்களை நிரப்புவதில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிக ஈடுபாடு காட்டாமல் காலத்தை இழுத்தடித்து வந்தார் என்பதும் –

இதனால் மேனிலை நீதிமன்றங்களின் ஆயங்கள் மற்றும் அமர்வுகளைக் கூட்டுவதில் மிகுந்த நெருக்கடி நிலவியது என்பதும் –

மேனிலை நீதிமன்றங்களின் வழக்குகளை உரிய காலத்தில் முடிக்க முடியாத காலதாமதம் மேலும் எல்லை மீறியது என்பதும் – குறிப்பிடத் தக்கதாகும்.

\+ + +

தம்மை 'கலாநிதி' என்று குறிப்பிட்ட தவறுக்காக இப்போது தமது சபாநாயகர் பதவியைத் துறக்க வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகியிருக்கின்றார் அசோக சபுமல் ரனவல.

இலங்கையின் வரலாற்றில் மிகக் குறுகிய காலம் சபாநாயகராக இருந்தவர் என்று பெயரை அவர் பெற்றுச் செல்கின்றார். புதிய நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வில் மட்டுமே அவரால் சபாநாயகராகப் பதவியாற்ற முடிந்திருக்கின்றது.

அடுத்த சபாநாயகரைத் தெரிவு செய்வதற்காக நாளை நாடாளுமன்றம் கூடும்போது அதில் சாதாரண எம்.பியாக வந்து அமர வேண்டிய துரதிர்ஷ்டம் அவருக்கு.

அவர் பதவி துறந்துள்ள பின்னணியில் அவருடைய கலாநிதிப் பட்டம் தொடர்பிலும் அவரது கடந்த கால செயற்பாடுகள் தொடர்பிலும் புதிய தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

அவர் கலாநிதி பட்டத்தை பெற்றதாக கூறப்படும் ஜப்பானின் வஸேடா பல்கலைக் கழகம் ஒரு தனியார் நிறுவனம் என்று கூறப்படுகின்றது. அது பட்டங்களை வழங்குகின்றது.

ஆனால் 2018 இல் இலங்கையில் மருத்துவ பட்டங்களை உள்நாட்டில் வழங்கும் வாய்ப்பைப் பெற்ற 'தெற்காசிய தொழில்நுட்பம் மற்றும் மருத்துவக் கழகம்' (சைட்டம்) தொடர்பில் பெரும் சர்ச்சை எழுந்தது. அப்போது அந்தக் கட்டமைப்புக்கு எதிராகப் பெரும் போராட்டம் நடத்திய தரப்பில் முக்கியஸ்தராக விளங்கியவர் 'அரச மருத்துவ பீட மாணவர்களின் பெற்றோர் சங்க' தலைவராகக் களத்தில் குதித்து 'சைட்டம்' நிறுவனத்திற்கு எதிராக ஆக்ரோஷமாக போராட்டங்களை முன்னெடுத்த இந்த ரனவல.

அந்த 'சைட்டம்' நிறுவனம் பட்டங்களை விற்கும் ஒரு வர்த்தகக் கடை என்று அப்போது விமர்சித்த ரனவல, அந்த நிறுவனத்திடம் பணத்திற்குப் பட்டத்தை வாங்க முடியும் என்றும் காட்டமாகக் கூறி எதிர்ப்புக் காட்டி வந்தவர்.

ஆனால் 'சைட்டம்' அமைப்புக்கு எதிரான அவரது போராட்டங்கள் பற்றிய அறிக்கைகளில் அவர் 'பேராசிரியர்' என்று குறிப்பிடப்பட்டிருந்தார்.

ஆனால் இப்போது ஆறு ஆண்டுகள் கழித்து 'கலாநிதி' பட்டத்தை நிரூபிப்பதற்கான ஆவணங்களை அவரால் சமர்ப்பிக்க முடியவில்லை என்பதுதான் சுட்டிக்காட்டப்படுகின்ற விடயமாக உள்ளது.

இலங்கை மாணவர்கள் வெளிநாட்டு பட்டங்களைப் பெறுவதற்காக அந்நிய செலாவணியை செலவழிப்பதை தடுப்பதற்காகவே 'சைட்டம்' போன்ற நிறுவனங்களுக்கு எதிரான போராட்டம் என்று தமது போராட்டத்தை நியாயப்படுத்தியவர் ரனவல.

ஆனால் இப்போது அத்தகைய பட்டத்தைத்தான் தமக்கான 'கலாநிதி' விவகாரமாக அவர் பயன்படுத்தி வந்தமை சர்ச்சைக்குரியதாகியிருக்கின்றது.

ரனவலவின் மகன் முன்னர் ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவின் தரப்போடு நெருக்கமாக செயல்பட்டவர் என்றும், அசேதன உரங்களை – இரசாயனங்களை – முற்றாகப் பயன்படுத்தக் கூடாது என்ற தடையைஜ் கோட்டஅரசு முட்டாள்தனமாக விதிப்பதற்கு காரணமாக இருந்த ஆலோசகர்களில் ஒருவர் ரனவிலவின் மகன் என்றும் ஒரு தகவல் உண்டு . அது பற்றி பின்னர் புலனாய்வு செய்து, ஆதாரங்களைப் பெற்று, விடயங்களை எழுதலாம் என்று நினைக்கின்றேன்.

## ஜெய்சங்கர், நிர்மலா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

இந்தியா – இலங்கை பொருளாதார ஒத்துழைப்புக்களை பலப்படுத்திக் கொள்ளல் மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான முதலீட்டு வாய்ப்புக்களை விரிவுபடுத்திக்கொள்வது தொடர்பில் இந்திய நிதி, நிறுவன அலுவல்கள் அமைச்சர் நிர்மலா சீதாராமுக்கும் ஜனாதிபதி அநுரகுமாரவுக்கும் இடையிலான சந்திப்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அதேநேரம் இந்திய சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அதிகளவில் அழைத்து வருவது மற்றும் இலங்கையின் விவசாய நவீனமயமாக்கல், டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இலங்கையுடனான நட்புறவை என்றும் பேணுவோம் என்றும் அநுரகுமாரவிடம் நிர்மலா இதன்போது தெரிவித்தார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கருக்கும் ஜனாதிபதி அநுரகுமாரவுக்கும் இடையிலான சந்திப்பு சிநேகபூர்வமாக இடம்பெற்றது.

இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சிக்கு இந்தியாவின் மிகப்பெரிய சந்தையை பயன்படுத்திக்கொள்வது குறித்தும் அதில் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், இலங்கையின் சுற்றுலா, முதலீடு மற்றும் வலுசக்தி துறைகளில் ஒத்துழைப்பு வழங்குவற்கும் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் இதன்போது இணக்கம் தெரிவித்தார்.

மீன்பிடித்துறை மற்றும் தேசிய ஒற்றுமை மேம்பாடு உள்ளிட்ட இரு நாடுகளுக்கும் அன்னியோன்யமான விடயங்கள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

அதனையடுத்து இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் ஸ்ரீ அஜித் தோவால், ஜனாதிபதி அநுரகுமாரவைச் சந்தித்து வலயத்தின் பாதுகாப்பு குறித்து கலந்துரையாடினார்.

இலங்கை வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத், தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ உள்ளிட்டோரும் இதன்போது கலந்துகொண்டனர். – என்றுள்ளது.

---

## வடமராட்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
எலிக்காய்ச்சல் நோய் அறிகுறிகளுடன் சிகிச்சை பெற்று வந்த மேற்படி இளைஞர், பின்னர் நோயின் தீவிர நிலை உணரப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்தார்.

இதையடுத்து வடக்கில் எலிக்காய்ச்சல் நோயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 8 ஆக அதிகரித்துள்ளது.





# பொலிஸ் எனக் கூறி வெள்ளை வானில் வந்தவர்கள் குடும்பஸ்தர் மீது தாக்குதல்

(பா.சதீசன்)

முல்லைத்தீவு, முள்ளியவளை – தண்ணீரூற்றுப் பிரதேசத்தில் வீட்டில் இருந்த குடும்பஸ்தர் ஒருவர் மீது வெள்ளை வானில் வந்தவர்கள் தாக்குதல் நடத்தியதில் பாதிக்கப்பட்ட நபர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபர்கள் எனச் சந்தேகிக்கப்படுபவர்களுக்கும் தாக்குதலுக்கு இலக்கான குடும்பஸ்தருக்கும் இடையில் கொடுக்கல் வாங்கல் பிரச்சினை ஒன்று ஏற்பட்டுள்ள நிலையில் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளை வானில் வந்த கும்பல் ஒன்று முல்லைத்தீவு பொலிஸ் எனக் கூறி மேற்படி குடும்பஸ்தரை அவரது வீட்டுக்குள் அழைத்துச் சென்று தாக்குதல் நடத்தியுள்ளது.

இதன்போது 44 அகவையுடைய ஊற்றங்கரை வீதி, தண்ணீரூற்று, முள்ளியவளையைச் சேர்ந்த கோபால கிருஷ்ணன் கஜரூபன் என்பவர் படுகாயமடைந்த நிலையில் அவரது உறவினர்களால் மீட்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட நபரிடம் வாக்குமூலம் எடுத்து விசாரணைகளை மேற்கொள்ளும் நடவடிக்கையில் முள்ளியவளைப் பொலிஸார் ஈடுபட்டுள்ளார்கள்.

## கனடா பறந்தார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிறீதரன் நேற்று கனடாவுக்குப் பயணமாகியுள்ளார்.

கனேடிய வெளிவிவகார அமைச்சின் அழைப்பில் பேரில் அவர் அங்கு சென்றுள்ளார்.


இந்தப் பயணத்தின்போது, கனடாவின் வெளிவிவகார அமைச்சின் இந்தோ – பசுபிக் பிராந்தியங்களுக்கான பிரதி அமைச்சர் வெல்டன் எப்பை சந்தித்து அவர் உரையாடவுள்ளார்.

இந்தச் சந்திப்பு கனடாவின் – ஒட்டோவாவில் உள்ள வெளிவிவகார அமைச்சின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது, பொறுப்புக்கூறல், இந்தோ – பசுபிக் பிராந்தியத்தின் சமகால அரசியல் சூழல்கள், தமிழ் மக்களின் நெருக்கடிகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாகப் பேசப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனேடிய பிரதி அமைச்சருடனான சந்திப்பின்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசனும் பங்கேற்கவுள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் 23ஆம் திகதி வரையில் கனடாவில் தங்கியிருக்கவுள்ள சிறீதரன் எம்.பி. அங்கு பல்வேறு தரப்பினரையும் சந்தித்து உரையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# 5 அமைச்சுகளுக்கு பதில் அமைச்சர்கள்

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க இந்தியா சென்றுள்ளதன் காரணமாக 5 அமைச்சுகளுக்கு பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, வெளிவிவகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை பதில் அமைச்சராக, பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திராவும், பதில் டிஜிட்டல் பொருளாதார அமைச்சராக, பிரதி அமைச்சர் எரங்க வீரரத்னவும், பதில் பாதுகாப்பு அமைச்சராகப் பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் நிதி மற்றும் திட்டமிடல், பொருளாதார அபிவிருத்தி பதில் அமைச்சராக, பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெருமவும், பதில் தொழில் அமைச்சராக, பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்கவும் நியமிக்கப்பட்டுள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.



# கோழி இறைச்சியின் விலை அதிகரிக்கலாம்

எதிர்வரும் பண்டிகை காலத்தில் கோழி இறைச்சியின் விலை மேலும் அதிகரிக்கலாம்எனவியாபாரிகள்தெரிவிக்கின்றனர்.

தற்போது சந்தையில் 1 கிலோ கிராம் கோழி இறைச்சியின் விலை 900 ரூபாய் முதல் 1200 ரூபாய் வரை உள்ளது.

இருப்பினும் எதிர்வரும் நாள்களில் கோழி இறைச்சியின் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

# நிதி, தொழில்நுட்ப உதவிகள் தொடர்ந்தும் வழங்கப்படும்

## ஐக்கிய நாடுகள் சபை தெரிவிப்பு

நாட்டின் வளர்ச்சிக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகள் தொடர்ந்தும் வழங்கப்படும் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான நிரந்தர வதிவிட பிரதிநிதி மார்க் என்ட்ரூ ஃப்ரான்ஸுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போதே ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான நிரந்தர வதிவிட பிரதிநிதி மார்க் என்ட்ரூ ஃப்ரான்ஸ் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன்நாட்டில்நிலையான சமாதானத்தை மேம்படுத்துவதற்காக புதிய அரசாங்கத்தின் முயற்சிக்கு ஐக்கிய நாடுகள் சபை பூரண ஒத்துழைப்பை வழங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நீதிக்கு மாறான போக்கு!

அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் உள்ளூராட்சி சபைத் தேர்தலையும், செப்டெம்பர் மாதம் மாகாண சபைத் தேர்தலையும் நடத்த ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான அரசு திட்மிட்டுள்ளது என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

இது தொடர்பான சட்ட நடவடிக்கைகளை விரைந்து முடிக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகின்றது எனவும் கூறப்படுவதாக அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருக்கும் வேட்புமனுக்களை சட்டரீதியாக இரத்துச் செய்கின்றமை தொடர்பிலான சட்டத் திருத்தங்கள் அடுத்த சில வாரங்களில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.

அந்த சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்னர் தாக்கல் செய்யப்பட்டு, தேர்தல்கள் நடத்தப்படாமல் நிலுவையில் இருக்கும் அந்த வேட்புமனுக்களை ரத்துச் செய்தால் மட்டுமே புதிதாக வேட்புமனுக் கோரி, அந்தத் தேர்தல்களை ஆரம்பத்திலிருந்து நடத்த முடியும்.

அதற்காக, உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் வேட்புமனுக்களை இரத்துச் செய்வது தொடர்பான சட்டங்களைத் திருத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனப் பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கான பணிகளை சட்ட வரைவுத் துறை முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பழைய வேட்புமனுக்களை ரத்துச் செய்து, புதிதாக வேட்புமனுக்களை ஏற்று இந்தத் தேர்தலை நடத்தினால், 2022ஆம் ஆண்டுக்குப் பின்னர், இதுவரையான காலத்தில் புதிதாகப் பதிவு செய்யப்பட்ட 10 லட்சம் இளம் வாக்காளர்களும் இந்தத் தேர்தலில் வாக்களிக்க முடியும் என்று அந்த அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

340 உள்ளூராட்சி மன்றங்களுக்கான 8,711 வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்காகக் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் நடைபெற விருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு வேட்புமனுக்கள் கோரப்பட்டன.

அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த 8,672 வேட்பாளர்கள், 24 மாநகர சபைகள், 41 மாநகர சபைகள் மற்றும் 275 பிரதேச சபைகளின் உறுப்பினர் பதவிகளுக்கு வேட்புமனுத் தாக்கல் செய்திருந்தனர். அவர்களில் சுமார் மூவாயிரம் அரச ஊழியர்களும் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது.

வேட்புமனுக்களை சமர்ப்பித்த இந்த வேட்பாளர்கள் சுமார் எட்டாயிரத்து அறுநூறு பேரில் பலர் உயிரிழந்துள்ளமையுடன் சிலர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேசமயம், தேர்தல் கூட்டணித் தரப்புகள் அணி மாறியுள்ளன. வேட்பாளர்கள் கூட கட்சி, அணி, கூட்டு மாறி நிற்கின்றனர்.

இதன் காரணமாக பழைய வேட்பு மனுக்களை ரத்துச் செய்து, புதிதாக வேட்பு மனுக்களைக் கோரிப் பெற்று, அவற்றின் அடிப்படையில் தேர்தலை நடத்துவதுதான் சரியானதும் ஒழுங்கானதுமாக இருக்க முடியும்.

ஆனால், நிலுவையில் உள்ள பழைய தேர்தலை விரைந்து நடத்தி முடிக்கும்படி உயர் நீதிமன்ற உத்தரவு ஒன்று இருக்கையில், அதை நிறுத்தி, மாற்றாக, புதிதாக வேட்புமனுக்களைக் கோரிப் பெற்று அவற்றின் அடிப்படையில் தேர்தலை நடத்துவதாயின், இவ்விடயத்தில் உத்தரவு ஒன்றை - தீர்ப்பு ஒன்றை - வழங்கியுள்ள உயர்நீதிமன்றுக்கு அறிவித்து, அதன் அனுமதியோடு, இந்த விடயத்தை முன்னெடுப்பதுதான் சட்டப்படி ஒழுங்கான முறைமையாக இருக்க முடியும்.

நிலுவையில் உள்ள 'உள்ளூராட்சி மன்றத் தேர்தல் - 2023 ஐ' கிடைக்கும் அடுத்த வாய்ப்பில் விரைந்து நடத்தும்படி, உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கையில், அதற்கு மாறான நடவடிக்கைகளை - அந்த நடவடிக்கைகள் நடைமுறை சார்ந்த வகையில் நீதி, நியாயமானவையாக இருந்தாலும் - அவற்றை முன்னெடுப்பதற்கு முன்னர் நீதிமன்றுக்கு அறிவித்து, அதற்கான அனுமதியையும் இணக்கத்தையும் நீதிமன்றத்திடம் பெற்றுக் கொள்வதே ஒழுங்கு முறையான செயற்பாடாக இருக்க முடியும்.

அதைச் செய்யாமல், ஆளும் தரப்பு இவ்விடயத்தில் ஒருதலைப் பட்சமாக செயல்பட முனைவது நீதி முறைமைக்கு மாறான போக்கு ஆகும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றாம்.





# உக்ரைனிய படைகள் மீது தாக்குதால் நடத்துவதற்கு வடகொரியத் துருப்புக்களை பயன்படுத்தும் ரஷ்யா

உக்ரைனிய படைகளைத் தாக்குவதற்காக ரஷ்யா வடகொரியத் துருப்புக்களை பயன்படுத்த ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் குர்ஸ்க் பிராந்தியந்தில் யுத்தத்தில் ஈடுபட்டு வரும் உக்ரைனிய படைகள் மீதே வடகொரியத் துருப்புகளைப் பயன்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

இதன்படி, ரஷ்யா இன்றிலிருந்து வடகொரிய துருப்புக்களை பயன்படுத்தி வருவதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது குர்ஸ்க் பிராந்தியந்தில் மாத்திரம் பயன்படுத்தப்படும் வடகொரியத் துருப்புகள் எதிர்வரும் நாள்களில் உக்ரைனின் பல இடங்களிலும் ஈடுபடுத்தப்படுவர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய 11,000 வடகொரியத் துருப்புகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.





# சிரியா முழுவதும் இஸ்ரேல் 61 ஏவுகணை தாக்குதல்கள்





கடந்த 24 மணித்தியாலங்களில் சிரியா முழுவதும் 61 ஏவுகணை தாக்குதல்களை முன்னெடுத்துள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இதன்காரணமாக, சிரியாவின் தென்கிழக்கு பகுதியில் மின் இணைப்புகள் மற்றும் தொலைத்தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

இதேவேளை, இந்த தாக்குதலில் பலர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ட்ரம்ப்புக்கு 15 மில்லியன் அமெரிக்க டொலர் நட்டஈடு வழங்கும் சர்வதேச ஊடக நிறுவனம்

அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள டொனால்ட் ட்ரம்ப்புக்கு அவதூறு ஏற்படுத்தியமைக்காக சர்வதேச ஊடக நிறுவனமொன்று, அவருக்கு 15 மில்லியன் அமெரிக்க டொலரை நட்டஈடாக வழங்குவதற்கு ஒப்புக் கொண்டுள்ளது.

கடந்த மார்ச் 10 ஆம் திகதி நேர்காணல் ஒன்றின் போது, மேற்படி ஊடக நிறுவனத்தில் நெறியாளர், டொனால்ட் ட்ரம்புக்கு எதிரான பாலியல் குற்றச்சாட்டொன்று தொடர்பில் அவதூறான கருத்துக்களை வெளியிட்டார்.

எவ்வாறாயினும், டொனால்ட் ட்ரம்ப் மீதான பாலியல் குற்றச்சாட்டு, தொடர்பில் நியூயோர் நீதிமன்றம், தீர்ப்பை அறிவித்தது.

அதில் அவருக்கு எதிரான குற்றம் நிரூபிக்கத் தவறியதாகத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், டொனால்ட் ட்ரம்ப் மீதான அவதூறு தொடர்பில் குறித்த நெறியாளர் வருத்தம் தெரிவித்த அதேவேளை, தொடர்புடைய ஊடக நிறுவனம் நட்டஈடு வழங்குவதற்கும் ஒப்புக் கொண்டுள்ளது.

# வி.சி.கவில் இருந்து விலகுகிறேன்: ஆதவ் அர்ஜுனா அதிரடி அறிவிப்பு



"வி.சி.கவிலிருந்து விலகுகிறேன். சமத்துவம், சமநீதி அடிப் படையில் எனது அரசியல் பயணம் தொடரும். என்னைப் பற்றிய தேவையற்ற விவாதங்கள் பொதுவெளியில் தொடராமல் இருக்க வேண்டும் என்ற நோக்கில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியிலிருந்து முழுமையாக என்னை விடுவித்துக்கொள்வது என்று முடிவெடுத்துள்ளேன்."

– இவ்வாறு ஆதவ் அர்ஜுனா அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள கடிதத்தில்,

"நான் என்றும் மதிக்கும் அன்புத் தலைவருக்கு வணக்கம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினுடைய வியூக வகுப்பாளராக பணியாற்றத் தொடங்கி, கட்சியின் அடிப்படை உறுப்பினராக இணைந்தேன். தங்களுடைய சீரிய எண்ணத்தின்பால் எனக் குத் துணைப் பொதுச்செயலாளர் பதவி கொடுத்தீர்கள். அந்த பொறுப்புகளோடு கடந்த இரண்டு ஆண்டுகளாக அர்ப்ப ணிப்புடன் கட்சி பணியாற்றினேன்.

சமூகத்தில் புரையோடிப்போயிருக்கும் சாதிய கட்டமைப்பு கள், அதன் அடித்தளம், தொடர்ந்து நீளும் அதன் அதிகா ரக் கரங்கள், பாதிக்கப்படும் மக்களின் துயர்கள் ஆகிய வற்றை நான் ஆற்றிய களப்பணிகளில் உணர்ந்தேன். அதற்கு எதிரான செயற்திட்டங்களைக் கொள்கை ரீதியாக வகுத்து என்னைச் செயற்பட வைத்த விடுதலைச் சிறுத்தை கள் கட்சிக்கு நான் என்றும் கடமைப்பட்டுள்ளேன்.

எளிய மக்கள் குறிப்பாக, "சாதிய ஆதிக்கத்தினால் காலம்கால மாக புறக்கணிக்கப்பட்ட மக்கள் அதிகாரத்தை அடைய வேண்டும்" என்ற நோக்கில்தான் நான் என்னை நமது கட்சி யில் இணைத்துக்கொண்டேன். விடுதலைச் சிறுத்தைகளின் கொள்கைகளிலும் நிலைப்பாடுகளிலும் எனக்கு எவ்வித கருத்து வேறுபாடும் இல்லை. குறிப்பாக, கட்சியின் வளர்ச்சி என்ற ஒற்றைக் காரணியைத் தாண்டி எனக்கு வேறு எந்த செயற்திட்டங்களும் இந்த நிமிடம் வரை இல்லை என்பதை தங்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

எனக்குள் எழுந்த சில நியாயமான கோபங்கள் மற்றும் மக்கள் நலனுக்கு எதிரான விவகாரங்களில் என்னிடமிருந்து வெளிப்படும் கருத்துகள் விவாதப்பொருளாக மாறுகிறது. அது ஒருகட்டத்தில் எனக்கும், உங்களுக்கும் இடையே விரிசலை ஏற்படுத்தும் போக்காக மாறுவதை நான் விரும்பவில்லை.

ஏற்கனவே, கட்சியிலிருந்து என்னை ஆறு மாதம் இடை நீக்கம் செய்யப்பட்டிருக்கும் நிலையில், இதுபோன்ற வீணான விவாதங்களுக்கு வழிவகுக்க கூடாது என்று எண்ணுகிறேன்.

இனி வருங்காலங்களில், புரட்சியாளர் அம்பேத்கர் கூறியதை போல "அதிகாரத்தை நோக்கி கேள்வி எழுப்புங் கள்" என்கிற அடிப்படையில் "சாதி ஒழிப்பு, சமூக நீதி, எளிய மக்களுக்கான அரசியல் உரிமைகள் என்ற நிலைப்பாட் டோடு மதப் பெரும்பான்மைவாதம், பெண்ணடிமைத்தனம், மக்களை வஞ்சிக்கும் ஊழல் ஆகியவற்றை ஒழிக்கும்" அரசி யல் போராட்டங்களில் தங்களுடன் தொடர்ந்து பயணிக்கவே விரும்புகிறேன்.

எனவே, என்னைப் பற்றிய தேவையற்ற விவாதங்கள் பொதுவெளியில் தொடராமல் இருக்க வேண்டும் என்ற நோக் கில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியிலிருந்து முழுமையாக என்னை விடுவித்துக்கொள்வது என்று முடிவெடுத்துள்ளேன்.

அரசியல் களத்தில் என்னைப் பயணப்பட வைத்து, நேரடி யாகக் களமாடச் செய்த தங்களுக்கும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தோழர்களுக்கும் எனது நன்றியையும் அன்பையும் தெரிவித்துக்கொள்கிறேன். கட்சியிலிருந்து வெளியேறும் இந்த கனமான முடிவை கனத்த இதயத்துடன் காலத்தின் சூழ்நிலைக் கருதியே எடுத்துள்ளேன். இனி வரும் காலங்க ளில் உங்கள் வாழ்த்துகளுடன், மக்களுக்கான ஜனநாயகம், சமத்துவம், சமநீதி என்ற அடிப்படையில் எனது அரசியல் பயணம் தொடரும்..வாய்மையே வெல்லும்." எனக் குறிப் பிட்டுள்ளார்.

# அ.தி.மு.கவை பார்த்து ஆளுங்கட்சிக்கு பயம்

## பொதுக்குழு கூட்டத்தில் இ.பி.எஸ். தெரிவிப்பு




"அ.தி.மு.கவை பார்த்து ஆளுங்கட்சிக்கு பயம் வந்துவிட் டது. அதனால் தான் சட்டப்பேரவை கூட்டத்தொடர் நடத்தும் நாள்கள் கூட குறைந்திருக்கிறது. இதுவே அ.தி.மு.கவின் எழுச்சி. 2026 தேர்தலில் அ.தி.மு.க. தலைமையில் அமைக் கப்படும் கூட்டணி வெற்றிபெற்று ஆட்சியில் அமரும்."

–இவ்வாறு அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம், சென்னையில் நேற்று நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பேசிய பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி,

"கடந்த மக்களவைத் தேர்தலுக்குப் பின்னர் அ.தி.மு.க. மீது ஏராளமான விமர்சனங்கள் எழுந்தன. தேர்தல் கூட்டணி சரி யாக அமையவில்லை என்றார்கள். கூட்டணி வரும் போகும். ஆனால் அ.தி.மு.கவின் கொள்கை நிலையானது. தமிழகத்தில் தனித்து நின்று ஆட்சி அமைத்த ஒரே கட்சி அதிமுகதான். கடந்த 2021 ஆம் ஆண்டு வெறும் 1.98 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் தான் தி.மு.க. ஆட்சியில் அமர்ந்தது. தேர்த லின் போது 500 இற்கும் மேற்பட்ட வாக்குறுதிகளை கொடுத்து மக்களை ஏமாற்றியது.

சட்டப்பேரவை நாள்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வருகிறது. இதற்கு காரணம் பயம்தான். அ.தி.மு.கவை பார்த்து ஆளுங்கட்சிக்கு பயம் வந்துவிட்டது. இரண்டு நாள்கள் மட் டும் சட்டப்பேரவையை நடத்தியுள்ளார்கள். அதில் ஒரு நாள் மட்டும் எதிர்க்கட்சிகள் பேச அனுமதி. அதுவும் பிரதான எதிர்க்கட்சியான எங்களுக்கு 10 நிமிடங்கள் தான் அனுமதி. சட்டப்பேரவை நிகழ்வுகள் நேரலை என்பார்கள். ஆனால் நான் பேசும்போது அதனைத் துண்டிப்பார்கள். சட்டப்பேரவை யில் நான் பேசியதை ஒளிபரப்பி இருந்தால் தி.மு.க. அரசே இருந்திருக்காது

200 தொகுதிகளில் வெற்றி பெறுவோம் என அக்கட்சியின் எம்.பி. கனிமொழி கூறுகிறார். இது தி.மு.கவின் பகல் கனவு. 2026 தேர்தலில் அ.தி.மு.க. தலைமையில் அமைக்கப் படும் கூட்டணி வெற்றிபெற்று ஆட்சியில் அமரும்."– என் றார்.

# இன்றைய ராசி பலன்கள் - 16.12.2024




உங்கள் ஆற்றலை குறைக்கும் விதத்தில் உங்கள் மனதில் அவநம்பிக்கையான உணர்வுகள் தோன்றும்.நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் செயற்பட்டால் நீங்கள் சாதகமான பலன்களைப் பெறலாம்.

இன்று பணிச்சுமை கடினமாகக் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். ஆரோக்கியக் குறைபாடு காரணமாக உங்கள் பணிகளை விரைந்து ஆற்ற இயலாது.

நீங்கள் ஆவேசமான மன நிலையில் காணப்படுவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும் வாய்ப்பு உள்ளது. எனவே அதனை தவிர்ப்பது நல்லது.

இன்று குறைவான பண வளர்ச்சி காரணமாக குறைந்த பண வரவு காணப்படும். பணத்தை திறமையுடன் கையாள வேண்டியது அவசியம்.

உங்கள் தாயின் உடல் நலனுக்காக நீங்கள் பணத்தை செலவு செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.




இன்றைய நாளை உங்களுக்குச் சாதகமாக ஆக்கிக் கொள்ளலாம். உங்களின் மனநிலையின் மூலம் இது சாத்தியம். உங்கள்நோக்கம் நிறைவேறும் வகையிலான நல்ல முடிவுகளை நீங்கள் எடுப்பீர்கள்.

உங்கள் மனதில் காணப்படும் உறுதி காரணமாக உங்கள் பணியில் முன்னனியில் இருப்பீர்கள்.உங்கள் மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்ப்பீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் இனிமையாகப் பேசி இன்றைய நாளை சந்தோஷமாக கழிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் பணம் போதுமானதாக இருக்கும். பணத்தை உங்கள் சொந்தத் தேவைக்குப் பயன்படுத்துவீர்கள் மற்றும் சேமிப்பீர்கள்.

இன்று உங்களிடம் காணப்படும் நம்பிக்கையுணர்வு காரணமாக ஆரோக்கியமாக இருப்பதாக உணர்வீர்கள்.




இன்று அதிர்ஷ்டம் குறைவாக காணப்படும் நாள். எந்த முயற்சி எடுத்தாலும் அதை குறித்த நேரத்தில் முடிப்பது சிறிது கடினமாக இருக்கும். நீங்கள் பிறரிடம் உரையாடும் போது கவனமாக இருக்க வேண்டும்.

உங்களின்பணிச்சூழல் மகிழ்ச்சி அளிப்பதாக காணப்படாது.உங்களின் கடின உழைப்புக்காக நல்ல பெயரை பெற முடியாத சூழல் காணப்படும்.

உங்கள் துணையால் நீங்கள் புறக்கணிக்கப் படுவது போல உணர்வீர்கள். இம்மாதிரியான உணர்வுகளை தவிர்த்து இன்றைய நாளை சந்தோஷமான நாளாக ஆக்குங்கள்.

அதிகரிக்கும் குடும்ப பொறுப்புகள் காரணமாக இன்று அதிகமாக செலவு செய்ய நேரும்.

உங்கள் தந்தையின் உடல் நலனுக்காக செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.




இன்று சற்று அனுகூலமற்ற நாளாக இருக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க இயலாத நிலை இருக்கும். இன்று பொறுமை அவசியம். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடச் சூழலில் சுமூகமான நிலை இருக்காது. சக பணியாளர்களுடனான தொடர்பில் சில பிரச்சினைகள் காணப்படும்.

இன்று முழுவதும் உங்கள் துணையுடன் அமைதியாக கட்டுப்பாட்டுடன் பழகுங்கள். தேவையற்ற பேச்சுக்களை தவிர்க்கும் வகையில் நாவடக்கம் மேற்கொள்ளுங்கள்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். செலவுகள் அதிகமாக இருக்கும். உங்கள் தேவைகளுக்காக கடன் வாங்குவீர்கள்.

தோல் அரிப்பு மற்றும் களைப்பு காரணமாக ஏற்படும் போதிய தூக்கமின்மை உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.




இன்று சிறந்த நாளாக இருக்கும். நீங்கள் இன்று விரைந்து செயலாற்றுவீர்கள். இதனால் திருப்தி ஏற்படும். இன்று பயணங்களால் ஆதாயம் ஏற்படும். இன்று வளர்ச்சி பெறுவது உறுதி.

இன்று சிறப்பாக பணியாற்றுவீர்கள். இன்று பணியில் மும்மரமாக ஈடுபடுவீர்கள். உங்கள் பணிகளை திறம்பட மேற்கொள்வீர்கள்.

உங்கள் நலன் குறித்த முக்கிய முடிவு எடுக்க உங்கள் துணை உங்களுக்கு வழி காட்டுவார். இதனால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

இன்று பணவரவு அதிகமாக இருக்கும். நிதி நிலை சுதந்திரமாக இருக்கும். பணத்தை நகை மற்றும் ஆடம்பர பொருள்கள் வாங்குவதற்கு பயனுள்ள வகையில் பயன்படுத்துவீர்கள்.




இன்று உங்களுக்கு முன்னேற்றம் எளிதில் கிடைக்கும். சிறிதளவு முயற்சியாயினும் வெற்றி நிச்சயம்.உங்கள் திறமை வெளி உலகத்தில் பளிச்செனத் தெரியும். இன்று தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

இன்று பணிகள் மிக அதிகமாக இருப்பதைக் காண்பீர்கள். உங்கள் திறமைகளை வெளிப்படுத்த புதிய வாய்ப்புக்களுக்கு நீங்கள் முயலலாம்.

உங்கள் துணையிடம் மனம் திறந்து பேசுவீர்கள். இது உங்கள் துணையை திருப்திபடுத்தும்.

இன்று உங்களிடம் பணம் மிகுதியாக காணப்படும். அதை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

உங்கள் மனதில் காணப்படும் தைரியம் மற்றும் திருப்தி காரணமாக உங்கள் ஆரோக்கியம் இன்று சிறப்புடன் காணப்படும்.




இன்று சிறந்த வளர்ச்சி காணப்படும். உங்கள் சிறிய முயற்சியின் மூலம் பெரிய வெற்றி காண்பீர்கள். இன்று நீங்கள் மிகுந்த நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் பணி சம்பந்தப்பட்ட முக்கியமான சந்திப்பில் நீங்கள் மூழ்கியிருப்பீர்கள். இந்த சந்திப்பில் உங்கள் உரையாடலைக் கண்டு உங்கள் சகபணியாளர்கள் ஆச்சரியமடைவார்கள்.

உங்கள் துணையுடன் நட்பான முறையில் பழகுவீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

இன்று சீரான ஆரோக்கியம் காணப்படும். தேக ஆரோக்கியம் சிறப்புடன் இருக்கும்.




இன்று அசௌகரியங்கள் காணப்படும்.அதற்கு உங்கள் மனஅழுத்தங்கள் காரணமாக இருக்கலாம்.மனஅழுத்தத்தைக் குறைக்க நல்ல இசையை கேட்பது திரைப்படங்கள் பார்ப்பது போன்ற பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளுங்கள்.மகிழ்ச்சி கிடைக்கும்.

உங்கள் பணிகளை சமாளிப்பது கடினமாக காண்பீர்கள்.எனவே திட்டமிட்டு பணியாற்றினால் வெற்றிக்கு வழி கிடைக்கும்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். இது உறவில் அமைதியையும் நல்லினக்கதையும் பாதிக்கும்.

இன்று பணத்தை கையாள்வது கடினமாக இருக்கும். பண இழப்பிற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

# இன்றைய ராசி பலன்கள் - 16.12.2024




இன்று மந்தமாகக் காணப்படுவீர்கள். சுறுசுறுப்புடன் இருக்க வேண்டியது அவசியம். நல்லதையே நினையுங்கள்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்றுவதில் சில ஏமாற்றங்களோ அல்லது தடைகளோ காணப்படும். உங்கள் சகபணியாளர்களுடனான உங்கள் தொடர்பாடல் நற்பலன்களை அளிக்காது.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் நடக்க வாய்ப்புள்ளது. இதனை தவிர்த்து நட்புடன் பழகுவது நல்லது.

இன்று செலவுகள்தவிர்க்க முடியாது. எனவே செலவுகளை கட்டுப்படுத்த வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாகக் காணப்படாது. முதுகு வலி மற்றும் இருமல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று துடிப்பான நாளாக இருக்கும். உங்கள் இலட்சியங்களை அடைவதற்கு உகந்த நாள். நீங்கள் உங்களுக்கென சில செயல்களை அமைத்துக் கொண்டு அதில் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் சகபணியாளர்களுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். கடினமான பணிகளைக் கூட எளிதாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான முறையில் பழகுவீர்கள். இதனால் மகிழ்ச்சி நிலவும்.

இன்று பணம் மிகுதியாக காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் நல்ல காரியங்களுக்கு பயன் செய்வீர்கள்.

இன்றைய நாள் உங்களுக்கு சௌகரியங்கள் வழங்கும் என்பதால் நீங்கள் இன்று நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று வெற்றிகரமான நாளாக இருக்கும். நீங்கள்செய்யும் செயல்கள் அனைத்தும் உங்களுக்கு சாதகமாக முடியும். நீங்கள் நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கும். உங்கள் திறமைகள் பாராட்டைப் பெறும். உங்கள் செயல்திறன் மூலம் உங்களுக்கு கூடுதல் நன்மைகள் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான நினைவுகளை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் துணையுடன் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். இன்று உங்களிடம் காணப்படும் அதிகப்படியான ஆற்றல் உங்கள் ஆரோக்கியத்தை சிறப்புடன் வைத்திருக்கும்.




இன்று குறைந்த பலன்களே கிடைக்கும். இன்று சில ஏமாற்றங்களைக் காண்பீர்கள். எல்லாவற்றையும் நட்பு முறையோடு அணுகுங்கள்.

நீங்கள் அதிகமாக பணியாற்ற வேண்டியிருக்கும். அது உங்களுக்கு கவலையை உண்டாக்கும். பணியாற்றும் முறையை திட்டமிட்டு அதற்கேற்றாற் போல் செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சுமுகமான உறவு காணப்படாது. அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும். இனிமையான வார்த்தைகளைப் பேச வேண்டும். துணையின் விருப்படி நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பயணத்தின் போது பண இழப்புக்கான வாய்ப்புகள் உள்ளது. பணத்தை கவனமுடன் கையாள வேண்டும்.

உங்கள் குழந்தைகளின் ஆரோக்கியத்துக்காக பணம் செலவு செய்ய நேரும்.

